# DEPOSITION OF WITNESS

{Chapter XXIII Code of Crl. Procedure}

## IN THE COURT OF XXV METROPOLITAN MAGISTRATE COURT, EGMORE, CHENNAI-08.

| | |
|---|---|
| Case No | : 5083/2023 |
| Deposition of Witness | : PW 4 |
| Name | : திரு. செல்வம் பர்னாந்து பொ |
| Husband/ Father Name | : Polifas |
| Age | : 53 |
| **முகவரி** | : Manager, Indian Overseas Bank,<br>295, Velachery Road, East Tambaram, |

Solemnly affirmed in accordance with the provision of the oaths act 1969 on the day of 27.05.2026. (**Time -12.00 பிற்பகல்)**

இன்றைய தினம் 1, எதிரி ஆஜர். 2, 5 எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜரில்லை. 5 வது எதிரிக்கு வழக்கில் ஆஜராக விலக்களிக்கப்பட்டுள்ளது. 5 எதிரியின் வழக்கறிஞர் ஆஜர்.

சாட்சியின் அடையாளம் அவருடைய ஆதார் அடையாள அட்டை மூலம் அடையாளம் உறுதி செய்யப்பட்டது.

**<u>மனு அனுமதிக்கப்பட்டு சாட்சியம் மீண்டும் அழைத்து சத்தியபிரமாணம் செய்து 1 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.</u>**

1. நான் என்னுடைய கல்வி தகுதி என்னவென்றால் ஏம்பிஏ படித்துள்ளேன். நான் எப்பொழுது பணிக்கு சேர்ந்தேன் என்றால் 06.12.1994 ம் தேதி பணிக்கு சேர்ந்தேன். என்னவாக பணியில் சேர்ந்தேன் என்றால் கிளர்க்காக பணியில் சேர்ந்தேன். 2010-12 ஆண்டுகளில் என்ன பணி செய்து வந்தேன் என்றால் 2012 ம் ஆண்டு உதவி மேலாளராக பணி உயர்வு பெற்றேன். நான் எங்கு பதவி உயர்வு பணியில் சேர்ந்தேன் என்றால் நாகர்கோவிலில் பணியில் சேர்ந்தேன். எத்தனை ஆண்டுகள் பணிபுரிந்தேன் என்றால் 2011-2016 அங்கு பணிபுரிந்தேன். எப்போழுது நான் மேலாளராக பணி உயர்வு பெற்றேன் என்றால் 2016 ம் ஆண்டு ஜூலை மாதத்தில் பணி உயர்வு பெற்றேன். மேலாளர் பணி

செய்வதற்காக பயிற்சி அளிக்கப்பட்டதா என்றால் பயிற்சி அளிக்கப்பட்டது. வங்கிக்கு கடிதங்கள் வந்தால் பதிவேடு வங்கியில் உள்ளதா என்றால் உள்ளது.

2. எங்கள் வங்கியிலிருந்து அனுப்பப்படும் கடிதங்களை பதிவு செய்வதற்கான பதிவேடு பராமரிக்கப்படுகிறதா என்றால் பராமரிக்கப்படுகிறது. வழக்கு சம்பந்தமாக காவல் துறையினர் கோரும் கடிதங்களை பராமரிக்க எங்கள் வங்கியில் கோப்பு தனியாக பராமரிக்கப்படுகிறதா என்றால் தனியாக பராமரிக்கப்படவில்லை. பொதுவாக பராமரிக்கப்படுகிறது. 2010 முதல் 2012 வரை சென்னை மவுன்ட்ரோடு ஐஓபி கிளையில் நான் பணிபுரியவில்லை என்றால் சரிதான். நான் எந்த ஆண்டு சென்னை மவுன்ட்ரோடு ஐஓபி கிளையில் மேலாளராக பணி நியமனம் செய்யப்பட்டேன் என்றால் 2019 ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் மேலாளாராக பணிக்கு சேர்ந்து 2024 ம் ஆண்டு ஜூன் வரை பணிபுரிந்தேன். இந்த வழக்கு சம்பந்தமாக எப்போழுது விசாரித்தார்கள் என்றால் 09.03.2023 ம் தேதி போலீசார் வழக்கு சம்பந்தமாக என்னை விசாரித்தார்கள். போலீசார் என்னை விசாரித்து பதிவு செய்த வாக்குமுலம் நகல் கொடுத்தார்கள். 09.03.2023 ம் தேதி போலீசார் வழக்கு சம்பந்தமாக ஆவணங்கள் கோரி வேண்டுகோள் கடிதம் கொடுத்தாரா என்றால் இல்லை.

3. 2010 முதல் 2012 வரை ஐஓபி மவுண்ட் ரோடு கிளையில் யார் மேலாளராக பணிபுரிந்து வந்தார்கள் என்றால் சண்முகநாதன் என்பவர் பணிபுரிந்து வந்தார். 2023 ம் ஆண்டு சண்முகநாதன் எங்கு பணிபுரிந்தார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. எங்கு பணிபுரிந்தார் என்ற விவரத்தை மேல் அதிகாரிகளிடம் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் கேட்டு தெரிந்து கொள்ளவில்லை. நான் சண்முகநாதனை நேரடியாக பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. சண்முகநாதன் இவ்வழக்கு சம்மந்தமாக நடைபெற்ற பரிவர்த்தனை குறித்து மேல் அதிகாரிகளிடம் கேட்டு போலீசாரிடம் தெரிவித்தேனா என்றால் மேல் அதிகாரிகளிடம் கேட்கவேண்டிய அவசியமில்லை. அதனால் பரிவர்த்தனை விவரங்களை போலீசாருக்கு தெரிவித்தேன். அதசாஆ.13 ஆவணம் 27.12.2012 தேதியிட்ட சாட்சிய

அழைப்பாணை என்றால் சரிதான். அதில் 28.12.2012 ம் தேதி போலீசார் எங்கள் வங்கியின் மேலாளரை விசாரணைக்கு ஆஜராக அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4. அதசாஆ.13 ஆவணத்தில் இவ்வழக்கில் முதல் தகவறிக்கை மற்றும் புகார் மனு நகல் இணைக்கப்பட்டதாக விவரம் தெரிவிக்கப்படவில்லை என்றால் சரிதான். 28.12.2012 ம் தேதி எங்கள் வங்கியில் மேலாளார் மேற்படி சாட்சிய அழைப்பாணையின் அடிப்படையில் காவல் துறையிடம் விசாரணைக்கு ஆஜராகினாரா என்றால் அது பற்றி தெரியாது. போலீசார் என்னை 09.03.2023 விசாரித்தபோது இந்த சாட்சிய சம்மனை நான் படித்து பார்த்தேனா என்றால் அப்போழுது இந்த ஆவணம் என்னிடம் கொடுக்கப்படவில்லை. அதனால் அதை படித்துப்பார்க்கவில்லை. இந்த ஆவணம் இருப்பது எப்போழுது எனக்கு தெரியவந்தது என்றால் இப்போழுது தான், இன்று தான் நீங்கள் நீதிமன்றத்தில் காட்டியதால் தெரிய வந்தது. போலீசார் என்னை விசாரித்தபோது அதசாஆ.11 ஆவணத்தை என்னிடம் காண்பித்தார்களா என்றால் காண்பித்தார்கள். அதசாஆ.11 05.12.2012 தேதி போடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5. அதசாஆ.11 ஆவணம் என்னிடம் போலீசார் காட்டிய பிறகு இது சம்பந்தமாக சண்முகநாதனை தொடர்பு கொண்டு இது சம்பந்தமான விவரம் கேட்டு தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. போலீசார் என்னை விசாரித்தபோது இந்த ஆவணம் எங்கள் அலுவலகத்திலிருந்து வழங்கப்பட்டுள்ளதா என்ற விவரத்தை Dispatch Register சரி பார்த்தேனா என்றால் சரிபார்க்கவில்லை. 27.12.2012 தேதியிட்ட சாட்சி சம்மன் (அதசாஆ.13) ஆவணம் எங்கள் வங்கியில் பெறப்பட்ட விவரத்தை அதற்கான பதிவேடு சரிபார்த்தேனா என்றால் சரிபார்க்கவில்லை. போலீஸ் விசாரணைக்கு அதசாஆ.13 அடிப்படையில் திரு.சண்முகநாதன் 28.12.2012 ம் தேதி ஆஜரானார்களா என்ற விவரத்தை எங்கள் அலுவலக கோப்புகள் மூலம் சரிபார்த்தேனா என்றால் எனக்கு அப்போழுது ஆவணம் காட்டப்படாதனால் அலுவலக கோப்புகளை நான் சரிபார்க்கவில்லை.

**உணவு இடைவேளைக்காக இச்சாட்சியம் குறுக்கு விசாரணை ஒத்துவைக்கப்படுகிறது. (1.15 பிற்பகல்)**

**சாட்சி மீண்டும் அழைத்து சத்தியபிரமாணம் செய்து குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்யப்படுகிறது. (2.40 பிற்பகல்)**

6. போலீசார் 09.03.2023 ம் தேதி என்னை விசாரித்தபோது சண்முகநாதன் ஏன் விசாரிக்கவில்லை என்று கேட்டேனா என்றால் கேட்கவில்லை. 09.03.2023 ம் தேதி என்னை விசாரித்தபோது போலீசார் 05.12.2012 தேதியிட்ட ஆவணத்தை (அதசாஆ.11) என்னிடம் காண்பித்தார்கள். அதில் VGN Developers private limited என்ற நிறுவனத்தின் ஸ்டேட்மென்ட் அக்கவுண்ட் மற்றும் வஞ்சுளவள்ளி என்ற பெயரில் வழங்கப்பட்டிருந்த நகல் ஆகியவை அதசாஆ.11 ஆவணத்துடன் காண்பித்தார்கள். அதன் அடிப்படையில் தான் நான் சான்று வழங்கினேன் என்றால் அதன் அடிப்படையில் மட்டும் நான் வழங்கவில்லை. அந்த ஆவணங்களை வங்கி கணினி கோப்பில் உள்ள ஆவணங்களுடன் ஒப்பிட்ட சரிபார்த்து சான்று வழங்கினேன்.

7. VGN Developers private limited என்ற நிறுவனத்தின் வங்கி கணக்கில் 005802000002527 என்ற வங்கி கணக்கு தான் நான் 09.03.2023 அன்று பார்க்கும் போது அதே பெயரில் இருந்தது என்றால் சரிதான். அந்த நிறுவனம் எங்கள் வங்கியில் நிறுவனத்தின் பெயர் மாறியிருப்பதாக கடிதம் ஏதாவது கொடுத்தார்களா என்றால் என்னுடைய பணி காலத்தில் கொடுக்கவில்லை. நான் ஆவணத்தை கணினி பார்த்த நேரத்தில் 01.08.2010 முதல் 31.08.2010 வரை நான் பார்த்த மேற்படி நிறுவனத்தின் வங்கி பேரேட்டின் நிறுவனத்தின் பெயர் அதே பெயர் தான் இருந்தது. நிறுவனத்தின் பெயர் மாற்றப்படவில்லை. காவல் துறையினரிடமிருந்து 09.03.2023 ம் தேதி போலீசார் என்னை விசாரித்தபோது இந்த வழக்கில் புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையின் நகல்கள் கேட்டு வாங்கினேனா என்றால் நான் கேட்டு வாங்கவில்லை. நான் வழங்கிய சான்று கணினியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டு பிரின்ட் எடுக்கப்பட்டு

கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி ஆவணம் நான் எப்போழுது கொடுத்தேன் என்றால் 09.03.2023 அன்று தான் கொடுத்தேன்.

8. நான் கொடுத்த வங்கி கணக்கு பேரேடு இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதை நான் பார்த்தேனா என்றால் நான் பார்க்கவில்லை. நான் இந்த வழக்கு சம்பந்தமாக கொடுக்கப்பட்ட சாட்சிய சட்டப்பிரிவு 65 பி கீழான சான்று யாருக்கு வழங்கப்பட்டது என்ற விவரம் உள்ளதா என்றால் யாருக்கு வழங்கப்பட்டது என்ற விவரம் இல்லை. சான்றிதழ் அந்த சான்று யாருக்கு வழங்கப்படுகிறது என்ற விவரம் குறிப்பிட்டு கொடுக்கப்படுவது வழக்கமில்லை. அதசாஆ.15 நான் வழங்கிய 2 ஏ சான்றிதழ் அந்தக் கடிதம் யாருக்கு அனுப்பபட்டது என்ற விவரம் இல்லை என்றால் சரிதான். ஆனால் எதற்காக அந்த கடிதம் அனுப்பபட்டது என்ற விவரம் உள்ளது. அதசாஆ.15 ஆவணத்தில் குற்ற வழக்கு எண் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குற்றவழக்கு எண் குறிப்பிடபடவில்லை. புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையில் உள்ள விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். இந்த வழக்கில் எனக்கு சாட்சியமளிக்க எந்த முகாந்திரமும் இல்லை என்றால் சரியல்ல. போலீசார் வற்புறுத்தலுக்காக நான் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் நான் வழங்கியுள்ள பிரிவு 65 பி ன் கீழான சான்று மற்றும் 2 ஏ சான்று வழங்க எனக்கு அதிகாரமில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் நான் 3 வது நபர் என்பதனால் எனக்கு சாட்சியமளிக்க அதிகாரமில்லை என்றால் சரியல்ல. **(3.00 பிற்பகல்)**

**மறுவிசாரணை – இல்லை.**

Typed to my dictation in Open Court,
read over to the deponent and admitted
to be correct.

XXV Metropolitan Magistrate,
Egmore, Chennai – 08.